பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 11 2024 7 15

செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திள்-</u>

1. உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டுளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
2. அடுத்த ஆண்டுக்குள் பெட்ரோலிய எரிபொருளுடன் 20 சதவீதம் உயிரி எரிபொருட்களை கலப்பதற்கான இலக்கு எட்டப்படும் என்று மத்திய அமைச்சர் திரு ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.
3. இந்தியாவிலிருந்து கூடுதலாக பருப்பு வகைகளை இறக்குமதி செய்வது குறித்து ரஷ்யா ஆய்வு மேற்கொண்டுள்ளது.
4. ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.
5. மொனாக்கோவில் நடைபெறும் **Monte –carlo** ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

நாட்டின் உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் பிஜேபி மேற்கொண்டுள்ளதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

மகாராஷ்டிரா மாநிலம் சந்திராப்பூரில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மகாராஷ்டிரா மாநிலத்தில் ஆளும் பிஜேபி கூட்டணி அரசு, கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிக அளவில் நேரடி அந்நிய முதலீடுகளை கொண்டு வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

மக்களுக்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளதாகக் கூறிய அவர், வீட்டுவசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் இணைப்பு, மின்னணு கட்டமைப்பு உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்பட்டள்ளதாகக் குறிப்பிட்டார்.

மாநிலத்தில் புதிய விமான நிலையங்கள், விரைவுச் சாலைகள், வந்தே பாரத் ரயில்கள், புதிய ரயில் பாதைகள் உள்ளிட்டவை மத்தியில் ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுடன் இணைந்து மகாராஷ்டிரா அரசு சிறப்பாக செயல்படுத்தி இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நாளை நடைபெறுகிறது.

இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 43 தொகுதிகளுக்கு நாளை முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

முதற்கட்ட வாக்குப்பதிவுக்காக 15 ஆயிரத்து 344 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ரவிக்குமார் தெரிவித்துள்ளார்.

ராஞ்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலை அமைதியாகவும், நியாயமாகவும் நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

200 கம்பெனி துணை ராணுவப் படையினர் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் செயப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் என்று தெரிவித்த தலைமை தேர்தல் அதிகாரி, குறிப்பிட்ட தொள்ளாயிரத்து 50 வாக்குச்சாவடிகளில் மட்டும் மாலை 4 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்று கூறினார்.

இந்நிலையில் பல்வேறு மாநிலங்களில் 34 சட்டப்பேரவை தொகுதிகளுக்கும், கேரள மாநிலம் வயநாடு மக்களவை தொகுதிக்கும் நாளை இடைத்தேர்தல் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

பெட்ரோலிய எரிபொருளுடன் உயிரி எரிபொருட்களை கலப்பதால் நாட்டிற்கு 91 ஆயிரம் கோடி ரூபாய் இறக்குமதி செலவினங்கள் குறையும் என்று பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு ஹர்தீப்சிங் பூரி தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் இன்று 27-வது எரிசக்தி தொழில்நுட்ப மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், உயிரி எரிபொருள் பயன்பாட்டால் வேளாண்துறை மேலும் வளர்ச்சியடையும் என்று கூறினார்.

பெட்ரோலியப் பொருட்களுடன் 20 சதவீதம் வரை உயிரி எரிபொருள் கலந்து பயன்படுத்துவதற்கான இலக்கு அடுத்த ஆண்டுக்குள் எட்டப்பட்டு விடும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய எண்ணெய் நிறுவனங்கள் பசுமை எரிசக்தி உற்பத்திக்கு மாற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி இலக்குகளை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகக் கூறினார்.

2047-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் எரிபொருள் தேவை இரண்டரை மடங்கு அதிகரிப்பதற்கான வாய்ப்பு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போது ஆண்டுக்கு 400 முதல் 450 மில்லியன் டன் கச்சா எண்ணெய் உற்பத்தி செய்யப்படுவதாகவும் திரு ஹர்தீப்சிங் பூரி கூறினார்.

[]<<<>>>[]

இந்தியா – ரஷ்யா இடையே பருப்பு வகைகள் வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து ரஷ்ய வேளாண் அமைச்சகத்தின் தூதுக்குழு புதுதில்லியில் ஆய்வு செய்தது.

மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை செயலர் திருமதி நித்தி காரே-வுடன் ஆய்வு செய்தனர்.

கடந்த சில ஆண்டுகளில் மசூர் பருப்பு மற்றும் பட்டாணி வகைகளை ரஷ்யா அதிக அளவில் இறக்குமதி செய்து வருகிறது.

உளுந்து மற்றும் துவரம் பருப்பையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புகள் குறித்தும் ரஷ்ய குழுவினர் கேட்டறிந்தனர்.

இந்த சந்திப்புக்குப்பின் மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், உளுந்து, துவரம் பருப்பு, கொண்டைக் கடலை உள்ளிட்ட ரகங்களின் ஏற்றுமதியை இந்த ஆண்டு ஜூலை மாதம் முதல் படிப்படியாக உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரிப் பருவத்தில் இந்த ஆண்டு பருப்பு வகைகளின் உற்பத்தி அதிகரித்துள்ளதால் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் பிரகாசமாக உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

கன்னியாகுமரி கடலில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி டிசம்பர் மாதம் மற்றும் ஜனவரி ஒன்றாம் தேதி ஆகிய இரண்டு நாட்கள் வெள்ளிவிழா கொண்டாட்டத்தை நடத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள காணொலி உரையில், இந்த வெள்ளிவிழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள், கல்லூரி மாணவர்களிடையே செயற்கை நுண்ணறிவு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஓவியப்போட்டிகள் போன்றவை நடத்தப்படும் என்று கூறியுள்ளார்.

அய்யன் திருவள்ளுவர் சிலை அருகே முப்பரிமாண லேசர் காட்சி நடத்தப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து மாவட்ட நூலகங்களிலும் திருவள்ளுவர் உருவப்படத்திற்கு வெள்ளிவிழா நாளில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும் என்றும் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மின் கட்டமைப்பை நவீனமயமாக்கவும், புதிய மின் நிலையங்களை நிறுவவும் மாநில அரசு கோரியுள்ள மூவாயிரத்து 247 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டத்திற்கு விரைந்து ஒப்புதல் வழங்குமாறு மாநில மின்துறை அமைச்சர் திரு செந்தில்பாலாஜி மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற எரிசக்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், மாநில மின் நிறுவனங்களின் நிதி மற்றும் செயல்பாட்டு திறனை மேம்படுத்தும் நோக்கில் மத்திய அரசின் நிதி நிறுவனங்களின் வட்டி விகிதங்களை எட்டு சதவீதமாக குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

தமிழகத்தில் மத்திய அரசால் செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு முன், மாநில அரசின் கருத்துக்களையும் பெற வேண்டுமென்றும், அப்போதுதான் திட்ட இலக்குகள் நடைமுறைக்கு ஏற்ற வகையில் அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழகத்தில் காற்றாலை மூலம் உற்பத்தியாகும் சுமார் 35 ஜிகாவாட் மின்சாரத்தை மத்திய மின் இணைப்புக்குக் பதிலாக மாநில வலை அமைப்புகள் வழியாக கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு திரு செந்தில்பாலாஜி கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

இந்திய அஞ்சல்துறை சார்பில் கோவை மாவட்ட அளவிலான அஞ்சல் தலைகள் சேகரிப்பு இரண்டு நாள் கண்காட்சி பீளமேடு பகுதியில் இன்று தொடங்கியது.

இந்த கண்காட்சியை 20-க்கும் மேற்பட்ட பள்ளிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆர்வமுடன் பார்த்ததாக கோவை மாவட்ட முதுநிலை கண்காணிப்பாளர் திரு சிவகங்கர் தெரிவித்தார்.

*( வாய்ஸ்பைட் - சிவசங்கர் ) --- 43 செகண்ட்*

**[]<<<>>>[]**

தென்மேற்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தப்பகுதி வடதமிழகம் - தெற்கு ஆந்திர கடற்பகுதியில் நிலை கொண்டுள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு பாலசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக அடுத்த நான்கு நாட்களுக்கு தமிழகத்தின் பெரும்பாலான பகுதியில் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - பாலச்சந்திரன் ) --- 48 செகண்ட்*

**[]<<<>>>[]**

மொனாக்கோவில் நடைபெறும் **Monte –carlo** மஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஸ்னா சின்னப்பா இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

அவர், ஜெர்மனியின் கத்ரினா டைகோவா-வை மூன்று – பூஜ்ஜியம் என்ற புள்ளி கணக்கில் வென்றார்.

**[]<<<>>>[]**

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா இன்று ஒரு வெள்ளி மற்றும் இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**[]<<<>>>[]**

ஜப்பானில் நடைபெற்று வரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் அனிருத் சந்திரசேகர் - கலியாண்டா பூனாச்சா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**[]<<<>>>[]**

ப்ரோ கபடி லீக் போட்டியில் இன்று நொய்டாவில் நடைபெறவுள்ள ஆட்டங்களில் பெங்களூரு – ஜெய்ப்பூர் அணியையும், தில்லி – புனே அணியையும் எதிர்கொள்கின்றன.

**[]<<<>>>[]**